செ.வெ.எண்: 41/மார்ச் நாள்: 24.03.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர்கள், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 -.இல் 100 சதவீத வாக்குப்பதிவு எய்திட

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அண்ணா பல்கலைக்கழக பொறியியில் கல்லூரி வளாகத்தில் இன்று (24.03.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாணவ, மாணவியர்கள், நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 -.இல் 100 சதவீத வாக்குப்பதிவு எய்திட வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இராமநாதபுரம் அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2016-இல் வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று பொதுமக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்திட வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் விதமாக கல்லூரியைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள், "VOTE - 100%" என்ற வாசகம் ஏற்படும் படியாக அணிவகுத்து நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தொடர்ந்து மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாணவ, மாணவியர்கள் அனைவரும் வாக்காளர் உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மாணவ,மாணவியர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். 18 வயது பூர்த்தியான அனைவரும் வாக்களிக்க தகுதியானவர்கள் ஆவார்கள். எனவே வாக்காளர் பெயர் பட்டியலில் இதுவரை பெயர் பதிவு செய்யாமல் இருக்கும் மாணவ, மாணவியர்கள் உடனடியாக வாக்காளர் பெயர் பட்டியலில் தங்களது பெயர்களைச் சேர்த்து கொள்ள முன்வர வேண்டும். நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-இல் தாங்கள் தவறாமல் வாக்களிப்பதோடு தங்களது சுற்றத்தாரையும் வாக்களிக்க ஊக்குவித்திட வேண்டும் என மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி முதல்வர் திரு.சித்திரைவேல், இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.மாரி உட்பட அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**